


கர்ர்ர்ர்ர்ர்ர்ர் என்று தொண்டையைக் கனைத்தபடி, விவேக் ஒரு படத்தில் காறித் துப்புவார்.

எதிரே இருப்பவர், 'எதுக்குடா இப்ப துப்பின?' என்று கேட்பார். அதற்கு விவேக் சொல்லும் பதில்: 'உன்ன அவமானப்படுத்தத்தான்.'

இப்படி யோக்கியமான தமிழில் எழுதிப் படித்தால், மேற்படி இரண்டு வசனங்களும் சிரிப்பை வரவழைக்காது. ஆனால், படத்தில் பார்க்கும்போது, சிரிப்பு பிய்த்துக்கொண்டு போகும்.

சிரிக்க வேண்டுமானால் இப்படிச் செய்யலாம். உண்மையிலேயே அவமானப்படுத்த வேண்டுமென்றால்? அதுவும் ஒரு தனி நபரை அல்லாமல் ஒரு தேசத்தையே?

அதுதான் அல் காயிதாவின் உத்தேசம். இலக்கு அமெரிக்கா. திட்டம் செயல்படுத்தப்பட்ட ஆண்டு 1993, பிப்ரவரி மாதம் 26-ம் தேதி. கவனித்துக்கொள்ள வேண்டிய தேதி இது. அமெரிக்கா மீதான அல் காயிதாவின் முதல் தாக்குதல் நடந்தது அப்போதுதான். அதுவும் அமெரிக்க மண்ணிலேயே. சோமாலிய ரகசியத் திருப்பணிகள் ஒரு பக்கம் நடந்துகொண்டிருந்தபோதே திட்டமிடப்பட்டு அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதலில், சரியாக ஆயிரம் பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டார்கள். ஆறுபேர் தலத்திலேயே பிராணனை விட்டார்கள்.

வல்லரசு என்றும், உலகின் போலீஸ்காரன் என்றும் தெனாவட்டுடன் வலம் வந்த அமெரிக்காவுக்கு, அன்றைக்கு விழுந்த அடி சாதாரணமானதல்ல. ஆறுபேர் உயிரிழப்பல்ல; உலக வர்த்தக மையக் கட்டடம் என்கிற அமெரிக்காவின் பொருளாதார நாடி இயங்கிக்கொண்டிருந்த இடத்துக்கு அடியில் வைக்கப்பட்ட குண்டு என்பதால், அது ஒரு தேசிய அவமானமாக உடனடியாகக் கருதப்பட்டுவிட்டது.

இந்தத் தாக்குதல் திட்டத்தின் சூத்திரதாரியாகச் செயல்பட்டு, பின்னால் 1995-ம் ஆண்டு பாகிஸ்தானில் வைத்துக் கைது செய்யப்பட்ட ரம்ஸி யூசுஃப் (Ramzi Yousef) என்கிற இளைஞன், ஒரு பேட்டி கொடுத்தான். அந்தப் பேட்டியில் அவன் உதிர்த்த ஒரு திருவாய்மொழி: "எப்படியும் 2,50,000 பேரையாவது தீர்த்துக்கட்டவேண்டும் என்று நினைத்தேன். எங்கேயோ கணக்கு பிசகிவிட்டது."

இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பேரை ஒரு குண்டு கொல்லுவதற்கான ப்ராக்டிகல் சாத்தியங்கள் என்ன என்பது ஒருபுறம் இருக்க, நோக்கத்தில் இருந்த தீவிரத்தைப் பாருங்கள்!

அதுதான் அல் காயிதா. ரம்ஸி யூசுஃப் என்றொரு தீவிர ஜென்மம் அமெரிக்காவில் ஏதாவது நாச காரியம் செய்ய நினைத்து, அலைந்துகொண்டிருக்கிறது என்பதுகூட, அல் காயிதாவில் யாருக்கும் அப்போது தெரியாது. தற்செயலாகத்தான் ஒரு நூலிழை அகப்பட்டது.

ரம்ஸி யூசுஃப், குவைத்தில் பிறந்தவன். அவனது தந்தை ஒரு பாகிஸ்தானி. குவைத் ஏர்வேஸில் கௌரவமான உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்தவர். ஆனால், அவர்கள் குவைத்தில் வசித்துவந்த பகுதியில் பாலஸ்தீனிய அகதிகள் அதிகம் இருந்தார்கள். அவர்களும் முஸ்லிம்கள். குவைத்தும் ஒரு முஸ்லிம் நாடுதான். ஆனபோதிலும், பாலஸ்தீன அகதிகள் இரண்டாம்தரக் குடிமக்களாக அங்கே நடத்தப்பட்டதைப் பார்த்து, சிறிய வயதிலேயே மிகுந்த கோபமடைந்தான் ரம்ஸி யூசுஃப். அவனது கோபத்தை ஊதிப் பெரிதாக்க, அவனது தாய்மாமன் ஒருத்தரும் அங்கேயே இருந்தார். ஒரு பக்கம் இந்தக் கோபத்தை வளர்த்துக்கொண்டு, மறுபக்கம் நன்றாகப் படிக்கவும் செய்தான் யூசுஃப்.

1989-ம் ஆண்டு இன்ஜினீயரிங் டிகிரி முடித்துவிட்டு, குவைத்தின் திட்டத்துறை அமைச்சகத்தில் தகவல்தொடர்புத்துறையில் ஓர் இளநிலைப் பொறியாளராக உத்தியோகத்தில் சேர்ந்தான். ஒழுங்காக உத்தியோகம் பார்த்திருக்கலாம். ஆனால், முஸ்லிம் சகோதரத்துவ சித்தாந்தம் அவனை சும்மா இருக்கவிடவில்லை. வேலையை விட்டுவிட்டு, சாகசம் செய்யக் கிளம்பிவிட்டான். தாய்மாமனின் ஆசீர்வாதமும் ஆதரவும் இருந்தபடியால், தயங்காமல் தீவிரவாதம் செய்ய உலக நாடுகள் பலவற்றுக்குக் கிளம்பிப் போகத் தொடங்கினான்.

என்ன செய்வது, எங்கிருந்து தொடங்குவது? என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், அமெரிக்கா மீதான தாக்குதலில் ஆரம்பித்தால் ஒரு நல்ல கவனம் கிடைக்கும் என்று முடிவு செய்து, அமெரிக்காவுக்கு 1992-ம் ஆண்டு தொடக்கத்தில் வந்து சேர்ந்தான்.

வர்த்தக மையக் கட்டடத்தைத் தாக்கலாம் என்று முடிவு செய்து, அதற்கான வேலைகளை அவன் செய்துகொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு சமயம் அவனுக்குப் பணமுடை ஏற்பட்டது. அவசரமாக ஒரு அறுநூறு டாலர் வேண்டியிருந்தது. அந்தப் பணம் கிடைத்தால்தான் காரியம் ஒழுங்காக நடக்கும் என்கிற நிலைமை. என்ன செய்யலாம்? திக்கற்றவர்களுக்கு தெய்வமும் தாய்மாமனுமே துணை.

யூசுஃப் உடனே துபாயில் இருந்த தன் மாமனுக்கு டெலிபோன் செய்தான். 'இந்த மாதிரி ஒரு காரியத்தை உத்தேசித்திருக்கிறேன். நீங்கள் கொஞ்சம் பண உதவிக்கு ஏற்பாடு செய்யமுடியுமா?' என்று கேட்டான்.

யூசுஃப் ஒரு கத்துக்குட்டி, சுயமுயற்சித் தீவிரவாதி. அவனுக்கு அப்போது எந்த இயக்கத்தின் பின்புலமும் இல்லை. அவனது மாமா கொஞ்சம் தேர்ந்த தீவிரவாதி. ஆனால், அவரும் எந்த இயக்கத்திலும் இல்லை. ஒப்பந்த அடிப்படையில் யார் கூப்பிட்டாலும் போய்த் தீவிரவாதம் வளர்த்துவிட்டு வரும் நபர் அவர். அவர் பெயரை இப்போதாவது சொல்லிவிடலாம்.

காலீத் ஷேக் முகம்மது. ஆம். செப்டெம்பர் 11, 2001 அன்று அதே அமெரிக்காவில், அதே உலக வர்த்தக மையக் கட்டடத்தின்மீது விமானங்களை மோதி இடித்த அல் காயிதாவின் திருப்பணிக்கு, அவர்தான் சூத்திரதாரி.

சீனியர் தீவிரவாதியான அந்த ஷேக் மாமா, தன் மருமகனுக்கு உடனடியாக அறுநூறு டாலர் கிடைக்க உதவி செய்ததுடன் நிறுத்திக்கொள்ளாமல், உடனடியாக அல் காயிதாவுடன் தொடர்புகொண்டு, ரம்ஸி யூசுஃபின் திட்டத்தை விளக்கினார். WTC கட்டட வளாகத்தில் மிகப்பெரிய சேதத்தை உண்டாக்குவதன் மூலம் அமெரிக்க அரசுக்கு அதிர்ச்சிவைத்தியம் தரும் பணியை அல் காயிதா தொடங்க, ரம்ஸி யூசுஃப் ஒரு நல்ல கருவியாக இருப்பான் என்றும் சொன்னார்.

அல் காயிதா விழித்துக்கொண்டது. இதுதான் தருணம் என்று முடிவுசெய்து, உடனே தன்

அமெரிக்கப் பிரிவை அழைத்து, விஷயத்தை விவரித்தது. அன்றைய அல் காயிதாவின் அமெரிக்கப் பிரிவு என்பது, தனியொரு கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருந்த கோஷ்டியல்ல. தேசம் முழுவதும் வேறு வேறு பெயர்களில் எத்தனையோ நூறுபேர் அல் காயிதாவின் ஆட்களாக உலவிக்கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் ஒருங்கிணைக்கும் பணியில், கண்ணில்லாத கிழவரான ஷேக் உமர் அப்துர் ரெஹ்மான் படு தீவிரமாக இருந்தார்.

ப்ரூக்ளின் நகரின் மத்தியில் இருந்த ஃபாரூக் மசூதிதான் அவரது ஆபீஸ். அங்கேதான் அவர் எப்போதும் இருப்பார். மேலுக்குச் சில சிறுபத்திரிகைகள் நடத்திக்கொண்டு, உலக அமைதிக்காகப் பிரார்த்தனைகள் செய்துகொண்டு, அவ்வப்போது பொதுக்கூட்டங்கள் நடத்தி நிதி வசூலித் துக்கொண்டிருந்த நல்ல தாத்தாவாக அவர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அமெரிக்க போலீஸுக்கோ, உளவுத்துறைக்கோ அவர்மீது துளி சந்தேகமும் கிடையாது. ஆகவே அல் காயிதா தலைமை உடனடியாக அவரைத் தொடர்புகொண்டு, ரம்ஸி யூசூஃபுக்கு வேண்டிய உதவிகள் செய்யும்படி கைகாட்டிவிட்டது.

உதவி என்றால் என்ன? வைப்பதற்கு குண்டு வேண்டும். அதை எந்த மளிகைக்கடைக்கும் போய் வாங்கமுடியாது. மூலப் பொருள்களை வாங்கி, சொந்தமாக குண்டு தயாரிக்க வேண்டும். அது ஒரு தொழிற்கல்வி. அந்தக் கல்விக்கு எங்கே போவது?

பிரச்னையே இல்லை என்றார் அல் காயிதாவின் அமெரிக்கத் தாத்தா. ரம்ஸி யூசூஃபும் அவனது இன்னொரு கூட்டாளியான அஜாஸ் என்பவனும் உடனடியாக ஆப்கனிஸ்தானுக்கு மாட்டுவண்டியிலோ, விமானத்திலோ அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

ஆப்கன் காடுகளில் இயங்கிவந்த அல் காயிதாவின் முகாம்களிலேயே அவர்கள் தங்கவைக்கப்பட்டார்கள். ஒருவாரம் அங்கே தங்கிவிட்டு ரம்ஸி யூசூஃப் மட்டும் வேறு சில பணிகளுக்காக பாகிஸ்தான் போய்விட, அவனது கூட்டாளி அஜாஸ் அங்கேயே காத்திருந்தான். காபூலிலிருந்து வெடிகுண்டு தயாரிக்கத் தேவையான மூலப் பொருள்கள் அங்கே வந்து சேர்ந்தன. பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு பார்ட் டைம் தீவிரவாதி வந்து எப்படி மூலப்பொருள்களைக் கையாள்வது, எதையெதை எத்தனை தேக்கரண்டி சேர்ப்பது என்பது போன்ற பாடங்களை நடத்தினார்.

ஒருவாறு அவன் குண்டு தயாரிக்கக் கற்றுக்கொண்டபிறகு, ஆப்கன் ரூ பாகிஸ்தான் எல்லையில் உள்ள கால்டான் (Khaldan) என்னும் இடத்தில் இருந்த அல் காயிதா முகாமிலிருந்து அவர்களுக்கான பயிற்சிக் கையேடு ஒன்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டு வந்து சேர்ந்தது. அதையும் வாங்கிக்கொண்டு அவன் பாகிஸ்தானுக்குப் போய் ரம்ஸி யூசூஃபுடன் சேர்ந்துகொண்டான்.

அவர்கள் மீண்டும் அமெரிக்கா போய்ச் சேர்ந்து கற்றுத்தேர்ந்த விஷயங்களைச் செயல்படுத்திப் பார்க்க நினைத்தபோதுதான், துரதிர்ஷ்டவசமாக அஜாஸுக்கு அந்தக் கலவை ஃபார்முலா சரியாக நினைவுக்கு வரவில்லை. எதை எதை எந்த அளவு சேர்த்தால் குண்டு தயாராகும் என்கிற ஃபார்முலா. ஆகவே மீண்டும் ப்ரூக்ளின் மசூதிக்குப் போய் விஷயத்தைச் சொல்லி, உதவக் கேட்டுக்கொண்டார்கள்.

பார்வையற்ற ஷேக், இதெல்லாம் வேலைக்கு ஆகாது என்று நினைத்தாரோ என்னமோ. உடனடியாக ஈராக்கைச் சேர்ந்த ஒரு பாம் எக்ஸ்பர்ட் வரவழைக்கப்பட்டான். அவன் பெயர் அப்துல் ரஹ்மான் யாசின். அல் காயிதா என்றில்லை. எந்த இயக்கம் குண்டு வைப்பதென்றாலும், அதைத் தயாரித்துத் தருவதுதான் இவனது முழுநேரப் பணி. யார், என்ன காரணத்துக்காக குண்டு கேட்கிறார்கள், எங்கே வைக்கப்போகிறார்கள், எத்தனை பேர் இறப்பார்கள் என்றெல்லாம் கேட்க

மாட்டான். கொடுத்த காரியத்தை ஆத்மசுத்தியுடன் முடித்துக்கொடுத்துவிட்டு, கூலி வாங்கிக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்துவிடும் சமர்த்துத் தீவிரவாதி இவன்.

அந்த யாசின் பாய் வந்தவுடன் ரம்ஸி யூசூஃப்பும் அஜாஸும் உட்கார்ந்து அவனுடன் விவாதித்தார்கள். தங்கள் திட்டத்தை விவரித்து, எப்படியும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்கவேண்டும் என்கிற தங்கள் லட்சியத்தையும் சொன்னார்கள்.

பல்லாயிரக்கணக்கு என்றால் தயாரிக்கப்போகிற குண்டு கொஞ்சம் பலமாகவே இருக்கலாமே? யாசின் கணக்குப் போட்டு வேலையை ஆரம்பித்தான்.

உரமாகப் பயன்படும் யூரியாதான் மூலப்பொருள் என்று முடிவு செய்து, 600 கிலோ யூரியாவை முதலில் வாங்கினான். அதில் நைட்ரோக்ளிஸிரின், சல்ஃபூரிக் ஆசிட், அலுமினியம் அஜைட் (aluminium azide), மக்னீசியம் அஜைட் (magnesium azide) ஆகிய வேதிப்பொருள்களை வேண்டியமட்டும் கலந்தான். (இந்த azide என்பது நைட்ரஜன் சேர்மங்களின் அடிப்படையிலான ஆர்கானிக் கெமிக்கல் வகையறா. யாக்கை ரசாயனம் என்று ராஜாஜி தமிழில் சொன்னால் மண்டை காய்ந்துவிடும். ஆக, அது அப்படியே இருக்கட்டும். மிகவும் ஆபத்தான ரசாயனக் கலவை என்பது மட்டும் நமக்குப் போதும்.) பாட்டிலில் அடைக்கப்பட்ட உயர் அழுத்த ஹைட்ரஜன் கொஞ்சம் சேர்த்துக்கொள்ளப்பட்டது. எதற்கும் இருக்கட்டும் என்று கொஞ்சம் சோடியம் சயனைடையும் சேர்த்தான். இது எதற்கு என்றால், குண்டு வைக்கப்படும் இடத்தைச் சுற்றி உள்ள கதவு இடுக்குகள், ஜன்னல்கள், பிளாஸ்டிக் மற்றும் இரும்புக் குழாய்கள் எது இருந்தாலும், எங்கே கொஞ்சம் ஓட்டை இருந்தாலும் அதன் வழியே மெல்ல நுழைந்து கட்டடத்தின் மேலே போய்விடும். சுவாசித்தால் அடுத்த செகண்ட் சொர்க்கலோகப் பிராப்திதான். இவ்வாறாக, அட்வான்ஸ்டு லெவல் குண்டு தயாரிப்பை ரம்ஸி யூசூஃபுக்குப் பக்கத்தில் இருந்து செய்துகாட்டி சிலிர்ப்படையச் செய்துவிட்டு, தான் தயாரித்த கலவையை ஒரு பெரிய சிலிண்டருக்குள் திணித்து வெளியே ஒரே ஒரு ஃப்யூஸ் (fuse) மட்டும் தெரிகிறபடி ஏற்பாடு செய்துகொடுத்தான்.

ரம்ஸி யூசூஃப் செய்யவேண்டியது என்ன? மேற்படி குண்டு சிலிண்டரைப் பத்திரமாக எடுத்துச் சென்று உரிய இடத்தில் வைத்துவிட வேண்டியது. சும்மா தம்மடிப்பது மாதிரி சிகரெட் லைட்டரை எடுத்து, தீ வரவழைத்து, அந்த ஃப்யூஸின் மேல் லேசாகக் காட்டிவிட்டு இடத்தைவிட்டுப் போய்விட வேண்டியதுதான்.

வெளியே சின்னதாக ஒரு வெள்ளைப்பூண்டு மாதிரி தெரியும் அந்த ஃப்யூஸின் உண்மையான நீளம் இருபது அடி. ஆகவே முனையில் வைக்கப்பட்ட நெருப்பு, அந்த இருபது அடியையும் கடந்து வேதிப் பொருள் கேந்திரத்தைத் தொடுவதற்கு சரியாகப் பன்னிரண்டு நிமிடங்கள் ஆகும் என்று யாசின் சொல்லியிருந்தான்.

அந்தப் பன்னிரண்டு நிமிடங்கள்தான் யூசூஃபுக்கு இருக்கும் நேரம். அதற்குள் அவன் தப்பித்து வெளியேறி காணாமல் போய்விடவேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கும் பரலோகப் பிராப்தி நிச்சயம்.

மூலப் பொருள்களுக்கான செலவுத்தொகையாக முந்நூறு டாலர்களையும் தன் செய்கூலி, சேதாரம் எல்லாம் சேர்த்து சில ஆயிரம் டாலர்களையும் வாங்கிக்கொண்டு யாசின் ஊரைப் பார்க்கப் புறப்பட்டுப் போனான்.

குண்டு ரெடி. அடுத்து, அதை எப்படி வர்த்தக மையக் கட்டடத்துக்கு எடுத்துச் செல்வது? இந்த இடத்தில்தான் சிக்கல் வந்தது.